## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை - 2015

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகவராண்மையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகவராண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு உள்ளாகிய தினம் முதல் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு ஒதுக்கப்படாது அகற்றப்படுகின்ற ஆண்டிற்காக முழு வருடத்திற்கும் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யும் கொள்கை நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்த மூலதன மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய காலக்கழிவினை சீராக்கும் போது அது வரையில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்களுக்குரிய ரூபா 111,606,435 தொகையான காலக்கழிவு மீண்டும் ஒரு தடவை சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேருவளை மீன் சந்தைத் தொகுதி மற்றும் சுனாமி நிலையம் என்பன 2014 மார்ச் முதல் பாவனைக்கு தகுதியான நிலையில் காணப்பட்ட போதும், அத் திகதி முதல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படாமையின் காரணமாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 1,193,373 இனாலும் ரூபா 1,591,165 இனாலும் பெறுமானத்தேய்வு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 99 வருட குத்தகை உடன்படிக்கையின் கீழ் முகவராண்மைக்கு கையளிக்கப்பட்ட மீள் கணிப்பிட்டுப் பெறுமதி ரூபா 14,220,234 தொகையான கடோல்கெலே ஆராய்ச்சி நிலையம் முன்னைய ஆண்டின் போது ரூபா 198,000,000 தொகையில் மீண்டும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சீராக்கம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சொத்துக்களின் தொகுதியை சரியாக இனங்காணாது பெறுமானத்தேய்வு ஏற்பாடு காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 225,778 தொகை அதிகமாக பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) முகவராண்மையின் தேவைகளுக்கு இணங்காத வகையில் கணனி மென்பொருள் முறைமையொன்றுக்காக வெளி நிறுவனமொன்றுக்குச் செலுத்தப்பட ரூபா 272,160 தொகையான முற்பணம் 05 வருட காலம் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவள ஆய்வு அறிக்கையை தயாரிப்பதற்காக வெளி நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 1,612,898 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரியின் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு, கணனி மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1994 யூன் மாதம் 14 ஆந் திகதிய பீஏடீ/95 ஆம் இலக்க பொது முயற்சியின் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது முகவராண்மையில் உயர் முகாமைத்துவ தரத்தின் 19 உத்தியோகத்தர்களுக்காக பிரிவுத் தலைவர் படிகளாக ரூபா 456,533 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 434 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | பொதுத் திறைசேரியின் நிதியுதவியின் அடிப்படையில் தங்கியிருக்கின்ற அரச கூட்டுத்தாபனங்களுக்காக தேவையான மதிப்பீட்டுச் சேவைகள் அரசாங்க மதிப்பீட்டாளருக்கு கட்டணம் செலுத்தாமல் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும், முகவராண்மையினால் மதிப்பீட்டு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் தரப்பினருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 775,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக மேற்கொள்ளப்படாதிருந்ததாக போக்குவரத்து உத்தியோகத்தரினால் குறிப்பிடப்பட்டிருந்த போது மீளாய்வாண்டில் வாகன பழுது பார்த்தலுக்காக ரூபா 501,619 தனியார் நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் முகவராண்மையின் நிதி விளைவுகள் ரூபா 20,480,455 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 74,938,175 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 54,457,720 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் பதவியணியினர் ஊதியம் ரூபா 72,575,776 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரசாங்க மானியம் ரூபா 70,297,526 இனால் அதிகரித்தமையும் மீள் மதிப்பீட்டு நட்டம் ரூபா 46,097,693 இனால் குறைவடைந்தமையும் இதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையில் குறைவொன்று காணப்பட்டது. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் ஊழியர் ஊதியம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 152,754,450 ஆகக் காணப்பட்ட முகவராண்மையின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 123,494,212 வரை குறைவடைந்திருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் படிப்படியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு ரூபா 336,240,797 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முகவராண்மையின் நோக்கங்கள் மற்றும் பணிகளாக,

- நீரியல் வள வளம் தொடர்பான விடயம் தொடர்பில் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக விஞ்ஞான ரீதியான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பயன்படுத்துதலும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தலும்.

- நீரியல் வளங்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல், முகாமைத்துவம், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தியை அதனூடாக ஏற்படுத்துதல், பிரதான துறைகள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லல், அதற்குரிய தொழில்நுட்ப மற்றும் சட்ட விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் அனுசரணைகளைச் சேவைகளை வழங்குதல், அந்த பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல், அதற்காக பயனுள்ள தகவல்களையும் தரவுகளையும் சேகரித்தல், பரவலாக்குதல், வெளியிடல், மற்றும் கையேற்றல் தேவையான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் நிர்ணயிக்கப்படுகின்ற சகல அதிகாரச் செயற்பாடுகளையும் பணிகளையும் அமுல்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முகவராண்மையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) மன்னார் மற்றும் நிலாவெளி பிரதேசங்களில் மீன்கள் நிலைத்திருத்தல் தொடர்பாக உயிர் பல்வகைமை விடயங்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்யும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 நிதியிலிருந்து ரூபா 884,294

தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடான சுற்றாடல் முறைமை தொடர்பாக வரைபடமொன்றை வடிவமைத்தல் மற்றும் உயிர் பல்வகைமை விடயங்கள் தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கற்பிட்டி பிரதேசத்தில் கடல் ஆமைகள் இனவிருத்தி நிலையம் மற்றும் விரிவாக்குதல் தொடர்பான விஷேட சந்தர்ப்பங்களைக் கண்டறிதல் தொடர்பான செயற்திட்டத்திற்காக ரூபா 600,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 250,131 தொகை செலவில் தரவு சேகரித்தல் மாத்திரம் பெருகுவதை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆமைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல், ஆமைக்களைப் பாதுகாக்கும் நிலையமொன்றை தாபித்தல் மற்றும் சுற்றாடலுக்கு இசைவானதாக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பிரசித்தப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தை அமுலாக்கம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் செயல் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளில் பௌதீக செயல் முன்னேற்றம் 96 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டத்தை செயல் முன்னேற்ற அறிக்கையுடன் பரீட்சிக்கும் போது 05 பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்களை அமுல்படுத்தும் பௌதீக செயல்முன்னேற்றம் 70 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டமையால் இலக்குகள் உச்ச அளவில் அடைந்து கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 ஆம் ஆண்டில் 09 சதவீதமான முகவராண்மையின் சுயமாக உழைக்கப்பட்ட வருமானத்தின் சதவீதம் மீளாய்வாண்டு வரையில் 02 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. சுயமாக உழைக்கப்பட்ட வருமானத்தை உயர்வடையச் செய்வதற்கு முகாமைத்துவத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 53,400,900 தொகையான காணிகளின் உரித்தை முகவராண்மைக்கு கையேற்பதற்கு 2016 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கடலோர வலயத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 15,685,632 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட “தறணி” கப்பல் இது வரை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2014 நவம்பர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுச் செயற்திட்டத்தின் போது குறித்த கப்பலை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிடப்பட்ட போதிலும், 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரையில் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கப்பல் நிர்மாணிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 7,663,375 தொகையான கிரயமொன்று கப்பலில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகவராண்மையின் நோக்கங்களுக்கு புறம்பாக ரூபா 15,245,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீன் விற்பனை நிலையம் 2014 மார்ச் 21 ஆந் திகதி முதல் எவ்வித செயற்பாடுகளாகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

மேலும், இந்த நிர்மாணங்களுக்குரிய காணி முகவராண்மைக்கு முறையாக கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 படகுகளின் உற்பத்திக்காக இரண்டு படகு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 4,493,052 தொகையும், தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,902,938 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த தயாரிப்பு நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவையினை இனங்காணாமல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 120,000 தொகையான தந்தூரி அடுப்பு ரூபா 352,800 தொகையான பீங்கான் கழுவும் இயந்திரம் மற்றும் ரூபா 100,000 தொகைகளை அலுமினிய ஏணி என்பன 2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2014 ஏப்ரல் மாதத்தில் ரூபா 76,800 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளொன்று கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

2009 ஆம் ஆண்டின் பொது ரூபா 411,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருளொன்றை உள்ளடக்கிய ரூபா 52,000 பெறுமதியான கணணியொன்று 2012 ஆம் ஆண்டின் போது காணாமல் போயிருந்ததுடன் உரிய நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.7 முறைப்படி கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்**

தேசிய நீர் உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பனாபிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றின் உரித்தை கையேற்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 552,906 செலவில் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முகவராண்மையின் வளங்கள்**

நான்கு உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டு முகவராண்மையினால் படிகளாக ரூபா 1,142,846 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**4.9 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகவராண்மையிள் பதவியணியில் காணப்படும் 132 வெற்றிடங்களில் 96 வெற்றிடங்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குரியதாகக் காணப்பட்டமை முகவராண்மையின் பிரதான பணியான ஆராய்ச்சி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு கவனத்தில் கொள்ளக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் மாதம் முதல் பணிப்பாளர் (மனிதவள) பதவியின் நடவடிக்கைகள் பதிற்கடமை உத்தியோகத்தரினால் மேவுகை செய்யப்பட்டதுடன் அந்தப் பதவிக்காக

நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு முரணாக உயர் சம்பள படி நிலையொன்று வைக்கப்பட்டமையால் 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 1,741,540 தொகை அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், முகவராண்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 119 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2016 யூன் 28 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

ஆராய்ச்சி மற்றும் அளத்தல் நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கப்பலின் மணித்தியாலமொன்றின் கிரயத்தை குறைப்பதற்காகவும் அந்த கப்பலுக்கு 2013 திசெம்பர் 08 ஆந் திகதி ஏற்பட்ட விபத்தின் காரணமாகவும் ரூபா 2,204,727 தொகையான நட்டம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளுக்காக முகவராண்மையின் முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 26 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாட்டுக்களினதும் குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. சம்பள தயாரித்தல் செயற்பாடுகளுக்குரிய பிரதான பணிகள் ஒரே உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டமை மற்றும் கணக்குப் பிரிவின் தகவல்கள் காலரீதியாக மனித வளப் பிரிவின் தகவல்களுடன் இணக்கஞ் செய்யப்படாமை தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.